# 1 கதைகள் எப்படி உருவாகின?

கதை இல்லாத பொருட்களே உலகில் இல்லை. கதை தெரியாத மனிதர் என்று எவருமில்லை. கதை சொல்வது ஒரு கலை. அது சந்தோஷத்திலிருந்தும் பயத்திலிருந்தும் உருவாகிறது.

இந்தக் கதைகள் சொன்ன மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். இருட்டைக் கண்டு பயந்து போய் அதையொரு கதையாக்கினார்கள். பலநூறு வருடங்கள் கடந்து விட்டபோதும் இந்தக் கதைகள் கூழாங்கற்களைப்போல வசீகரமாயிருக்கின்றன. அவற்றில் சில கதைகளைப் படிப்போம்.

## கதை 01

## குயில் ஏன் கறுப்பாக இருக்கிறது?



முன்னொரு காலத்தில் உலகில் உள்ள பறவையினங்கள், விலங்குகள் எதற்கும் நிறம் என்று கிடையாது. எல்லாப் பறவைகளும் ஒன்று போலவே இருந்தன. அவை, தமது குரலை வைத்தே தம் இனத்தைச் சேர்ந்தது என அடையாளம் காண வேண்டியிருந்தன. சில பறவைகளின் குரல்கள் ஒன்று போல இருந்ததால் கடவுளுக்குக் குழப்பமானது.

இதனால், ஒரு நாள் கடவுள் பறவை - களுக்கும், விலங்குகளுக்கும் தனித்தனியான நிறங்கள் வழங்கிடத் தன்னை வந்து பார்க்கும்படி சேதி சொல்லி அனுப்பினார். பறவைகள் தங்களுக்கென தனியாக ஒரு நிறம் கிடைக்கப்போகும் சந்தோஷத்தில் வேகமாகப் பறந்து போயின. பறவைகள் கடவுளைப் பார்க்கப் போகும்போது குயிலைக் கண்டு தங்களுடன் வரும்படி கூப்பிட்டன. குயிலோ தனக்கு அவசரமில்லை எனப் பாடிக்கொண்டேயிருந்தது.

கடவுளிடம் முதலில் மயில் போனது. அதற்கு நீல நிறமும், குருவிக்கு சாம்பல் நிறமும், சிட்டுக்குருவிக்குத் தேன் நிறமும் தந்தார். இப்படியே தன்னிடம் வந்த பறவைகள், விலங்குகள் அனைத்துக்கும் கடவுள் நிறம் கொடுத்துக்

கொண்டேயிருந்தார். இதற்குள் சாயங்காலம் வந்து விட்டது. பறவைகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிறங்களை வாங்கிக் கொண்டு திரும்பியிருந்தன.

அப்போதுதான் குயில் புறப்பட்டுக் கடவுளைப் பார்க்கக் கடைசி ஆளாகப் போனது அவரிடமிருந்த வர்ணங்களெல்லாம் தீர்ந்து போய்விடவே, அவர் குயிலைக் கோபித்துக் கொண்டார். அப்போது, இருட்டத் துவங்கியது. எங்கும் இருள் பரவியது. கடவுள் கொஞ்சம் இருளின் கறுப்பைக் கைகளில் எடுத்து, குயில் மேல் தடவி ''இனிமேல் உன் நிறம் இதுதான் போ'' என அனுப்பினார். மற்ற பறவைகளைப் போல தனக்கு அழகான வர்ணம் கிடைக்காத குயில் அன்று முதல் கவலையாகத் தனிமையில் பாடிக்கொண்டேயிருக்கிறது.

**-பீகார்-**

## கதை 02

## நாய்கள் ஏன் ஒன்றோடு ஒன்று சண்டையிடுகின்றன?



நாய்கள் யாவும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. காட்டில் ஒரு நாள் விருந்து நடந்தது. அதற்கு நாய்களும் அழைக்கப்பட்டிருந்தன. விழாவிற்கு யார் தலைமை ஏற்பது என்ற கேள்வி வந்த போது முயல் ஒரு நாயைச் சுட்டிக் காட்டி ''இவர் தலைமை ஏற்கலாம்'' என்றது. அதைக் கேட்ட மற்ற நாய் 'அது எலும்புக்கு அலையும் நாய் அவனைவிட நான் உயர்ந்தவன்' என்றது. அதைக் கேட்ட மூன்றாவது நாய் ''நான் சுத்தமான நிறமும் அழகும் கொண்டவன். அதனால் நானே தலைவன்'' என்றது. நாய்கள் தங்களுக்குள்ளாக அடித்துக் கொள்ளத் துவங்கி விருந்தைச் சீர்குலைத்தன. அதைக் கண்ட கடவுள் இனிமேல் நாய்கள் ஒன்றுகூடினால் அது சண்டையாகத்தான் மாறும். தனித்தனியே திரியுங்கள் என விரட்டினார். அந்த நாளில் இருந்து நாய்கள் ஒன்றையொன்று கண்டால் சண்டையிடத் துவங்கிவிடுகின்றன.

**-செர்பியா-**

**கதை 03**

## பனை மரம் எப்படி உண்டானது?

ஒரு காலத்தில் அழகான இளம் பெண்கள் இருந்தார்கள். இவர்கள் திறமையாக நடனமாடுவதில் கைதேர்ந்தவர்கள். ஒரு நாள் ஏழு பேரும் மலையின் மகனாக இருந்த செரியதோகா என்பவனுடன் சேர்ந்து நடனமாட விரும்பினார்கள். விருப்பத்துடன் செரியதோகாவும் அதற்கு ஒத்துக்கொண்டான். நடனம் ஆட ஆரம்பித்தார்கள். இரவுபகலாக நடனம்! பல நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சாப்பாடு, தூக்கம் எல்லாவற்றையும் மறந்து ஏழு பெண்களும் சுழன்று ஒரு வார காலத்துக்கு நடனமாடினார்கள். ஆனால் அவர்களோடு ஆடிய மலையின் மகன் தனக்குப் பசித்தபோது, ஆட்டத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு ஏழு பெண்களுக்கும் தெரியாமல் அவன் மட்டும் ரகசியமாகச் சென்று சாப்பிட்டு விட்டு வந்துவிட்டான.



ஏழாம் நாள் நடனம் முடிந்ததும் ஏழு பெண்களும் நதியில் தங்களைச் சுத்தம் செய்துகொள்ளும் போது செரியதோகாவின் வாயிலிருந்து ஓர உணவுத துகள் வெளிப்பட்டது. இதைக் கண்ட அவர்கள் அவன் தங்களை ஏமாற்றி அவமதித்துவிட்டதாகக் கோபப்பட்டு அவனைப் பிரிந்து போனார்கள்.

தன்னுடைய தவறுக்கு வருந்தி, பிரிந்து செல்லும் பெண்களைத் துரத்திக் கொண்டு சென்ற செரியதோகாவின் கைகளுக்கு அகப்படாமல் ஓடிய ஏழு கன்னியரின் அணிகலன்களும் பூமியில் விழுந்து ஈச்சை முதலான ஆறு வகை மரங்களானது. அந்தப்பெண்களின் தலையிலிருந்து உதிர்ந்த கேசம்தான் தரையில் பனை மரமென முளைத்தது. அதனால்தான் பனை தன் ஓலைகளை அசைத்து எப்போதும் ஆடியபடியே உள்ளது.

**-மால்வா-**

## கதை 04

## காகம் ஏன் கத்திக்கொண்டேயிருக்கிறது?

அந்தக் காலத்தில் எல்லாப் பறவைகளுமே வெள்ளை நிறத்தில்தான் இருந்தன. ஒரு நாள், காகமும் மயிலும் ஒன்று சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்த போது, காட்டிலிருந்த பூக்களைக் கண்டன. காகம் மயிலிடம் ‘‘நாமும் ஏன் இது போல வர்ணம் தீட்டிக் கொள்ளக் கூடாது’’ என்று கேட்டது. மயிலும் அதற்கு ஒத்துக் கொண்டது.




உடனே காகம் காட்டிலிருந்த பச்சிலைகளைப் பறித்துவந்து, மயிலின் தோகையை வர்ணம் தீட்டியது. முடிவில் ‘‘ஒரு வானவில்லைப் போல நீ அழகாயிருக்கிறாய்’’ என்று மயிலிடம் சொன்னதும், மயில் மிகுந்த கர்வமாகி, தன் அழகை மற்றவர்களிடம் காட்ட வேண்டுமென்று துடித்தது. காகமோ, தன் இறகுகளை அழகுபடுத்தும்படி மயிலிடம் சொன்னது. ஆத்திரமடைந்த மயில் கறுப்புச் சாயத்தைக் காகத்தின் தலையில் கொட்டிவிட்டு ‘‘ உனக்கு இது போதும் ’’ என்று சொல்லியபடி கம்பீரமாக தன் தோகையை விரித்துக்கொண்டு சென்றது. ஏமாந்துபோன காகம் அன்றிலிருந்து கறுப்பாக உருமாறி கத்திக்கொண்டே இருக்கிறது.

**கம்போடியா**

## கதை 05

## கதைகள் எப்படி உருவாகின?



நீண்ட காலத்திற்கு முன்பு தாய் தந்தையரை இழந்த சிறுவன் ஒருவன் வளர்ப்புத் தாயிடம் வளர்ந்து வந்தான். சிறு வயதிலேயே வில்வித்தையில் தேர்ச்சி பெற்றிருந்த அவன் வேட்டையாடுவதற்காக தினமும் காட்டுக்குள் செல்வான். அவனுடைய திறமையால் காட்டுமிருகங்களும் பறவைகளும் அதிகம் வேட்டையாடப்பட்டன. ஒரு நாள் காட்டுப்பன்றியைத் துரத்திக்கொண்டு சென்ற அச்சிறுவன் பன்றி புதருக்குள் மறைந்து விடவே, அதைத் தேடிக்கொண்டு ஒரு பெரிய பாறையின் மீது ஏறி நின்றான். அங்கிருந்து பார்த்தபோது பன்றியைக் காண முடியவில்லை பாறையின் மீதே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான். பாறை மிகக் குளிர்ச்சியாக இருந்தது. தன் கைகளால் பாறையைத் தட்டினான். அப்போது யாரோ அவனைக் கூப்பிடுவது போன்ற சத்தம் கேட்டது.

சுற்றிலும் திரும்பிப் பார்த்தான் யாருமே இல்லை. திரும்பவும் அந்தச் சத்தம் கேட்டது. கூர்ந்து கவனித்த போது அது பாறையிலிருந்துதான் வருகிறதெனக் கண்டுபிடித்தான். அது வரை உறங்கியிருந்த பாறை அப்போதுதான் கண்விழித்தது போல அவனுடன் பேசத் தொடங்கியது. தனக்கு நிறைய கதைகள் தெரியுமென்றும், தான் கதையே கேட்டதில்லை என்றும் அவன் சொன்னதால் பாறை தனக்குத் தெரிந்த கதையொன்றைச் சொல்லத்தொடங்கியது. கேட்டு முடிப்பதற்குள் மாலையாகிவிடவே அவன் மறுநாள் வந்து கேட்பதாகச் சொல்லி வீட்டுக்குச் சென்றான். அன்று அவனுக்கு வேட்டையில் பறவைகளே கிடைக்க வில்லை. அதனால் ஆத்திரமடைந்த அவனது சித்தி தன்னோடு சிலரையும் அழைத்துக் கொண்டு அவனைத் தேடிக் காட்டுக்குள் சென்றாள். கதை சொல்லும் பாறையிடமிருந்து அவன் கதை கேட்டுக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அவர்களும் கதை கேட்கத் துவங்கினார்கள். அதன் பிறகு அந்தப் பழக்கம் அவர்களிடம் தொடர ஆரம்பித்தது. அப்படித்தான் கதைகள் உண்டாகின.உலகத்தில் உள்ள கதைகள் கல்லுக்குள்தான் ஒளிந்திருக்கின்றன. அந்தக் கதைகளை விழிப்படையச் செய்தால் அது தானே தன்னைச் சொல்லத் தொடங்கிவிடும் என்கிறார்கள்.

**-கென்யா-**

## கிரகித்தல் பயிற்சி

1. முற்காலத்தில் பறவைகளை எதனைக் கொண்டு அடையாளப் படுத்தினார்கள்?
2. பறவைகளுக்குக் கிடைத்த நிறங்கள் யாவை?
3. கடவுள் நாய்களைத் தனித்தனியே திரியுங்கள்" என விரட்டியதற்கான காரணங்கள் யாவை?
4. காகம் ஏன் கறுப்பாகியது?
5. இக்கதைகளில் கூறப்படும் சம்பவங்கள் எந்தளவிற்குப் பொருத்தப்பாடு உடையவை?
6. ஆதிகால மக்களிடம் காணப்பட்ட நம்பிக்கைகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. "நாய்கள் ஏன் ஒன்றோடு ஒன்று சண்டையிடுகின்றன" என்ற கதை உங்களிடத்தில் ஏற்படுத்தும் உணர்வுகளை நண்பர்களுடன் கலந்துரையாடுக.
2. உம்மைப் பறவையாகப் பாவித்து ஒரு கதையை வகுப்பறையில் மாணவர் முன்னிலையில் கூறுக?
3. இது போன்ற கதைகளை ஊர்ப் பெரியோர்களிடம் கேட்டறிந்து தொகுக்க.
4. நீங்கள் சேகரித்த கதைகளில் உள்ள வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய கருத்துகளைத் தொகுத்துத் தருக.
5. நாட்டுப்புறக் கதை ஒன்றைத் தெரிந்து நாடகமாக்கி மேடையேற்றுங்கள்.

## இலக்கணம்

### எழுத்து

**கீழே தரப்படும் எழுத்துக்களைக் கவனிப்போம்.**

**அ, கா, பெ** - අ, කා, පෙ A, k, P

இவை முறையே தமிழ், சிங்கள, ஆங்கில எழுத்துக்களாகும்.

இங்கு, ''எழுத்து என்றால் என்ன'' என சிந்திப்போம்.

> **"ஒரு மொழிக்குப் பயன்படும் அடிப்படை ஒலிகளின் வடிவம் எழுத்து எனப்படும். "**

தமிழில் எழுத்துக்கள் 247 ஆகும்

### தமிழ் எழுத்துக்களின் வகையும் தொகையும்

- தமிழ் எழுத்துக்கள் 247
  - முதல் எழுத்துக்கள் 30
    - உயிர் எழுத்துக்கள் 12
      - குறில் 5
      - நெடில் 7
    - மெய் எழுத்துக்கள் 18
      - வல்லினம் 6
      - மெல்லினம் 6
      - இடையினம் 6
  - **சார்பெழுத்துக்கள்**
    1. உயிர்மெய் எழுத்துக்கள் - 216
    2. முற்றாய்தம்
    3. உயிரளபடை
    4. ஒற்றள பெடை
    5. குற்றியலுகரம்
    6. குற்றியலிகரம்
    7. ஆய்தக் குறுக்கம்
    8. ஐகாரக்குறுக்கம்
    9. ஔகாரக்குறுக்கம்
    10. மகரக்குறுக்கம்.

| | | |
|---|---|---|
| முதல் எழுத்துக்கள் | - | 30 |
| உயிர் மெய் எழுத்துக்கள் | - | 216 |
| ஆய்த எழுத்து | - | 1 |
| மொத்தம் | - | 247 |

சார்பெழுத்துக்கள் பற்றி மேல் வகுப்புகளில் கற்போம்.

**முதல் எழுத்துக்கள் – 30 (உயிர் 12+ மெய் 18) = 30**

முதல் எழுத்துக்கள் என்பது தமிழ் மொழியின் அடிப்படை ஒலிகள் அல்லது எழுத்துக்களாகும்.

பின்வரும் எழுத்துக்களை உச்சரித்து இவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடுகளை இனங் காண்போம்.

தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கின் படி

**உயிர் எழுத்துக்கள் – 12**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

**மெய்யெழுத்துக்கள் – 18**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

**உச்சரிக்கும் போது காற்று எவ்விதத்தடையுமின்றி வெளி வருமாயின் அவற்றை உயிர் எழுத்துக்கள் என்போம்.**

**உச்சரிக்கும் போது காற்று தடைபட்டு வெளிவருமாயின் அவற்றை மெய்யெழுத்து என்போம்.**

உயிர் எழுத்துக்களில் குறில் 5, நெடில் 7 எனப் பார்த்தோம்.

குறில், நெடில் என்றால் என்ன என்பது பற்றிச் சிந்திப்போம்.

**மாத்திரை**

ஓர் எழுத்தை உச்சரிக்கும் கால அளவை (உச்சரிக்க எடுக்கும் நேரம்) நாம் **மாத்திரை** என்போம்.

ஒரு மாத்திரை என்பது,
"இயல்பு எழும் மாந்தர் இமை, நொடி மாத்திரை" என இலக்கண நூல்கள் கூறுகின்றன.

அதாவது, ஒரு மாத்திரை என்பது ஒருவர் இயல்பாகக் கண் இமைக்கும் காலம் அல்லது விரல் நொடிக்க எடுக்கும் காலம்.

உயிர் எழுத்துக்களில் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துக்களும் உச்சரிக்கும் பொழுது ஒரு மாத்திரை அளவை எடுப்பன. எனவே, இவற்றை குறில் அல்லது குற்றெழுத்துக்கள் என்போம்.

உயிர் எழுத்துக்களில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய 7 எழுத்துக்களும் உச்சரிக்கும் பொழுது இரண்டு மாத்திரை அளவை எடுப்பன, எனவே இவற்றை நெடில் அல்லது நெட்டெழுத்துக்கள் என்போம்.

ஆய்த எழுத்துக்கு மாத்திரை ½ ஆகும்.

உயிர் மெய்யெழுத்துக்கள் - உயிர் எழுத்தின் மாத்திரையைப் பெறும்

**I உதாரணம்:-**

க் + அ - க - 1 மாத்திரை
க் + ஆ - கா - 2 மாத்திரை

**மெய்யெழுத்துக்களையும் நாம் கீழ் வருமாறு பாகுப்படுத்துவோம்.**

**II உதாரணம்**

| | | |
|---|---|---|
| வல்லினம் | - 6 | க், ச், ட், த், ப், ற் |
| மெல்லினம் | - 6 | ங், ஞ், ண், ந், ம், ன் |
| இடையினம் | - 6 | ய், ர், ல், வ், ழ், ள் |

மெய்யெழுத்துக்கு மாத்திரை ½ ஆகும்.

**பின்வருமாறு இவற்றைப் பாடிப்பழகுங்கள்**

கசடதபற - வல்லினமாம்
ஙஞணநமன - மெல்லினமாம்
யரலவழள - இடையினமாம்

இவற்றைத் தனித்தனியாக உச்சரித்துப் பாருங்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மெய்யெழுத்துக்களைப் பகுத்தமைக்கான காரணம் புரியும்.

*மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய இடங்களிலேயே எழுத்துக்கள் பிறந்து, உதடு, நாக்கு, பல், அண்ணம் ஆகியவற்றின் முயற்சியால் வேறுவேறு ஒலிகள் (எழுத்துக்கள்) பிறக்கின்றன.*

வல்லின எழுத்துக்கள் - மார்பிலிருந்து பிறக்கின்றன.
மெல்லின எழுத்துக்கள் - மூக்கிலிருந்து பிறக்கின்றன
இடையின எழுத்துக்கள் - கழுத்திலிருந்து பிறக்கின்றன.

உயிர் எழுத்துக்களின் பிறப்பிடம் கழுத்து ஆகும்

**பயிற்சி**

*(அ) 1. உயிர் எழுத்துக்கள் என்றால் என்ன?*

*2. மெய் எழுத்துக்கள் என்றால் என்ன?*

*3. உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் ஏன் முதல் எழுத் துக்கள் என்கின்றோம்?*

*(ஆ) பின்வரும் அட்டவணையை உங்களது பயிற்சிப் புத்தகத்தில் வரையுங்கள்.*

| உயிர் எழுத்துக்கள் | | மெய் எழுத்துக்கள் | | | உயிர் மெய்யெழுத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| குறில் | நெடில் | வல்லினம் | மெல்லினம் | இடையினம் | குறில் | நெடில் |
| | | | | | | |

**கீழவரும் பந்தியை வாசித்து அதிலுள்ள எழுத்துக்களை மிகச்சரியாக இனங் கண்டு உரிய கூட்டில் எழுதுங்கள்.**

''தமிழ் மொழியில் பெண்ணடிமைத் தனத்தினதும் சாதியத்தினதும் நிலமான்யச் சமுதாயச் சிந்தனையினதும் சுவடுகள் ஆழப்பதிந்துள்ளன. சமுதாயச் சீர்த்திருத்தத்தில் அக்கறையுடையோர், மொழி பற்றி அசட்டையாக இருக்க முடியாது. சமுதாயமோ, மொழியோ வெறுமனே சட்டமியற்றி மாற்றக் கூடியன வல்ல. தமிழ் சமுதாயத்தை நவீன சிந்தனையுடனும், பரந்ததும் உலகளாவியதும் மனித சமத்துவத்துடனானதுமான பார்வையுடன் பரிச்சயப்படுத்துவதன் மூலமே தமிழ் சமுதாயத்தினதும் தமிழ் மொழியினதும் நவீனத்துவம் நடைமுறைச் சாத்தியமாகும்."